கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.

அ.வ.எண். 239 /2010

<u>தேதி : 23.09.2024</u>

<u>(வா.சா. 2) – திரு. முத்துலட்சுமி</u>

<u>சாட்சி அழைக்கப்பட்டு, 3ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>

<u>குறுக்கு விசாரணை :(3ம் பிரதிவாதி தரப்பில்)</u>

இந்த வழக்கு வாதிகளையும், பிரதிவாதிகளையும் பக்கத்து வீடு என்பதால் எனக்கு தெரியும். வழக்குச் சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம், நான்குமால் விபரம் தெரியுமா என்றால் சர்வே எண்.326/1பி, விஸ்தீரணம் 2 ஏக் 23 செ, நான்குமால் தெரியாது. தாவா சொத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பாத்திருக்கிறேன். அப்போது நான்குமால் என்ன என்பதை பார்த்தேனா என்றால் சொத்து மேற்கில் இருக்கிறது என்பது மட்டும் தெரியும். 1–ம் வாதி வைரமுத்துவின் கணவர் பெயர் என்ன என்றால் சண்முகம். நான் சொல்வது தவறு என்றும், 1–ம் வாதியின் கணவர் பெயர் என். கணேசன் என்றும் சொன்னால் எனக்கு தெரியாது. அதே சர்வே எண்ணில் 1–ம் வாதியின் கணவர் வாதியாக இருந்து பழனி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் சர்வே எண்.326/1பி–ல் ஏக் 1.41 நிலத்தை 1–ம் பிரதிவாதியிடமிருந்து தான் கிரையம் பெற்றதாக அ.வ.எண்.101/2018 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தண்டபாணியின் தகப்பனார் ரெங்கசாமிபிள்ளையை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். ரெங்கசாமிபிள்ளையின் தகப்பனார் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. ரெங்கசாமிபிள்ளையின் தாயார் பெயர், உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் பெயர் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.326/1பி–ல் 2 ஏக் 23 சென்டை யார், எந்த தேதியில் கிரையம் வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ரெங்கசாமிபிள்ளை 1975 ஆம் ஆண்டு 4 ஏக் 23 சென்டை தனித்து வாங்கினார். அந்த கிரைய ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேனா

என்றால் பார்க்கவில்லை. அந்த கிரையம் பதிவு செய்யும்போது பதிவு சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கிரையத்தை எவ்வளவு கிரையத் தொகைக்கு ஏற்படுத்தினார் என்றால் எனக்கு தெரியாது. கிரையத் தொகை முழுவதும் ரொக்கமாக கொடுத்தாரா, கடனுக்காக சாட்டுதல் கொடுத்தாரா என்றால் மொத்த கிரையத் தொகையையும் ரொக்கமாக கொடுத்தார். ரெங்கசாமிபிள்ளை வாங்கிய 4 ஏக் 23 சென்டுக்கு நான்குமால் எனக்கு தெரியாது. நான் வேலைக்கு செல்வதில்லை. சாப்பாட்டுக்கு என்ன வருமானம் என்றால் பிள்ளைகள் கொடுப்பார்கள். எனக்கு பிள்ளைகள் இல்லை, எனது தங்கையின் குழந்தைகள் தான் என்னை பாதுகாப்பார்கள். தாவா சொத்தின் சர்வே எண்.326/1பி என்பதை எதனடிப்படையில் சொல்கிறேன் என்றால் வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.326/1பி என்பது ஆரம்பத்தில் 326/1–ல் ஏக் 8.46 இருந்தது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 8 ஏக் 46 சென்டில் வழக்கு சொத்து எந்தப் பக்கம் உள்ளது என்பது தெரியுமா என்றால் மேற்குப் பக்கம் உள்ளது. ரெங்கசாமிபிள்ளை எப்போது இறந்தார் என்றால் 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறந்தார். ரெங்கசாமிபிள்ளைக்கு சர்வே எண்.326/1பி–ல் 4 ஏக் 43 சென்டில் 3–ல் 1 பாகம் தான் பாத்தியம் என்றும், தண்டபாணி மற்றும் குப்புராஜுக்கு தலா 3–ல் 1 பாகம் பாத்தியம் என்றும் சொன்னால் சரியல்ல. ரெங்கசாமிபிள்ளை உயிரோடு இருந்தபோது அவரது மகனான 1–ம் பிரதிவாதி தண்டபாணிக்கு 3–ல் 1 பாகத்தை 29.11.1980 ஆம் தேதி தான செட்டில்மெண்ட் எழுதி சொத்தை சுவாதீனம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதையடுத்து குப்புராஜ் 11.12.1989 ஆம் தேதி அவருடைய பிரிவினையில்லாத 1/3 பாகத்தை 3–ம் பிரதிவாதி மாசிலாமணிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. தண்டபாணிக்கு அவர் தகப்பனார் எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின்படியும், அவருக்கு கிடைத்த 1/3 பாகப்படியும், குப்புராஜ் எழுதிக்கொடுத்த பொது அதிகாரத்தின்படியான 1/3 பாகத்தையும் மொத்தம் 4 ஏக் 23 சென்டை 3–ம் பிரதிவாதி மாசிலாமணிக்கு 29.11.1993 ஆம்

தேதி இரு பதிவு கிரைய ஆவணங்கள் மூலம் கிரையம் செய்து சுவாதீனம் கொடுத்தார் என்றால் சரியல்ல. ரெங்கசாமிபிள்ளை இறப்பிற்கு பல வருடங்கள் முன்பே அவருடைய 1/3 பங்கை மகன் தண்டபாணிக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்த நிலையில் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 பஞ்சாயத்து பாகவிஸ்தி ஆவணம் மற்றும் உயில் ஏற்படுத்த அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கு வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. தண்டபாணி சர்வே எண்.326/1பி–ல் 4 ஏக் 23 செ முழுவதையும் 3–ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணங்கள் எழுதிவைத்த பிறகு அவற்றை கிரைய ரத்துப் பத்திரம் எழுதி ரத்து செய்தார் என்றால் கிரையமே எழுதவில்லை. அந்த கிரையம் ரத்து செய்தது செல்லாது என்று மாசிலாமணி பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, அந்த கிரைய ரத்து ஆவணங்கள் செல்லாது என்று தீர்ப்பானது தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2–ல் யார் யார் சாட்சி கையொப்பங்கள் செய்தார்கள் என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணத்தையும் இதுவரை நான் படித்துப்பார்த்தேனா என்றால் வா.சா.ஆ.3 ஆவணத்தைப் பார்த்திருக்கிறேன், வா.சா.ஆ.2 ஆவணத்தைப் பார்க்கவில்லை. வா.சா.ஆ.3 உயில் ஆவணத்திற்கு யார் பெயரில் பத்திரம் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆன உயில் ஆவணத்தின் பத்திரம் தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டையைச் சேர்ந்த பிச்சைக்கண்ணு என்பவர் பெயரில் ஆவணம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தஞ்சாவூரைச் சேர்ந்த சீனிவாசராஜா அந்த முத்திரைத் தாளை விற்றுள்ளார் என்றால் சரிதான். வழக்கைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.09.23 20:02:29 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி